# தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபை

## இரத்மலான/ மொறட்டுவ கழிவுநீர் அகற்றல் செயற்றிட்டத்தின் 2 ஆம் கட்டம் – 1 ஆம் படிநிலை

# பதவி வெற்றிடம்

## (செயற்றிட்ட ஒப்பந்த அடிப்படையில்)

இரத்மலான/ மொறட்டுவ கழிவுநீர் அகற்றல் செயற்றிட்ட 2 ஆம் கட்டம் - 1 ஆம் படிநிலையிலுள்ள பின்வரும் பதவி வெற்றிடத்திற்காக இலங்கைப் பிரஜைகளிடமிருந்து விண்ணப்பங்கள் இத்தால் கோரப்படுகின்றன.

### சிரேஷ்ட சமுகவியலாளர் பதவி (01 பதவி வெற்றிடம்)

**சம்பள செய்திதி** : பிளஸ் 3

**செயற்றிட்ட வகுதி** : 100 மில்லியன் அ.ஐ. டொலருக்கு மேலேயும் மற்றும் 250 மில்லியன் அ.ஐ. டொலருக்கு குறைவாகவும்.

### தகைமைகள் மற்றும் அனுபவம்:

பல்கலைக்கழகமானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட சமுகவியலில் பெற்ற கலைமாணி (விஷேட பட்டதாரிப் பட்டம்)

அல்லது

உரித்தான துறையில் பட்டதாரிப் பட்டத்திற்கு நிகரான தகைமையொன்றென பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட தகைமையொன்று.

அல்லது

உரித்தான துறையில் அங்கீகரிக்கப்பட்ட தொழில்சார் நிறுவனத்திலிருந்து பெற்ற இணைந்த அங்கத்துவமொன்று/நிகரான தொழில்சார் தகைமையொன்று.

அத்துடன்

நீர் மற்றும் துப்புரவேற்பாட்டு துறையில் சிரேஷ்ட மட்டத்தில் ஆகக் குறைந்தது 15 வருட அனுபவம். உட்கட்டமைப்பு செயற்றிட்டங்களுக்காக வடிகாலமைப்பு செயற்றிட்டங்கள்/ சமுக அணிதிரட்டல் ஆகியவற்றில் அனுபவமுள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

### பொதுவான நிபந்தனைகள்:

### வயதெல்லை:

விண்ணப்பங்களை மூடும் திகதியில் 64 வயதிற்கு குறைவாகவிருத்தல் வேண்டும்.

### சேவைக்கான நியதிகள் மற்றும் நிபந்தனைகள்:

இந்த நியமனமானது ஆரம்பத்தில் ஒரு வருட காலப்பகுதிக்கு ஒப்பந்த அடிப்படையில் அமைவதுடன் திருப்திகரமான செயற்பாட்டு தரங்கணித்தலுக்கு உட்பட்டதாக வருடந்தோறும் புதுப்பிக்கப்படும். இந்த நியமனம் தொடர்பாக 01/2019 என்ற இலக்கமுடைய முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கை பிரயோகப்படுத்தப்படும்.

### தெரிவு செய்யும் முறைமை:

தகைமைகள் மற்றும் அனுபவத்தின் அடிப்படையில் விண்ணப்பதாரிகள் தெரிவு செய்யப்பட்டு நேர்முகப் பரீட்சையொன்றிற்கு அழைக்கப்பட்டு நேர்முகப்பரீட்சையில் காட்சிப்படுத்தும் செயற்பாட்டின் அடிப்படையில் தெரிவு மேற்கொள்ளப்படும்.

முழுமையான சுயதரவு அத்துடன் கல்விசார் மற்றும் தொழில்சார் தகைமைகள், கடந்த கால அனுபவம் போன்றனவற்றின் பிரதிகளுடனான விண்ணப்பங்கள் 2021 மார்ச் 10 ஆம் திகதியன்று அல்லது அதற்கு முன்னராக கிடைக்கும் வகையில் பின்வரும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பப்படல் வேண்டும். தாமதமான சமர்ப்பித்தல்கள் நிராகரிக்கப்படும்.

தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் நீங்கள் விண்ணப்பிக்கும் பதவியானது குறிப்பிடப்படல் வேண்டும். அரசாங்க/ கூட்டுரு துறை அமைப்புக்களின் விண்ணப்பதாரிகள் அவர்களின் விண்ணப்பங்களை உரித்தான அமைப்புக்களின் தலைமையூடாகவே அனுப்புதல் வேண்டும்.

**செயற்றிட்டப் பணிப்பாளர்,**
**இரத்மலான / மொறட்டுவ கழிவுநீர் அகற்றல்**
**செயற்றிட்ட 2 ஆம் கட்டம் - 1 ஆம் படிநிலை,**
**தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபை,**
**இல. 213ஏ, ரெம்பிளர்ஸ் பாதை, கல்கிசை.**

**திகதி:** 15.02.2021